1974 ஏப்ரல் 10]

அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதை நடத்தவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கு ரூ. 3.685 லட்சம் அளவில் தொழில் நுட்ப ஒப்புதலுக்கு தலைமைப் பொறியாளருக்குச் சென்று, அவரும் ஒப்புதல் அளித்துவிட்டார்கள். இந்தத் திட்ட வேலை கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: கடம்பாக்குளத்து நேரடி விவசாயிகள், ஆயக்கட்டுதார்கள் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே உள்ள ஆட்சேபனையை ஒழுங்கான முறையில் சமாதனப்படுத்தி, அதற்கு ஒப்புதல் தருவதற்கு ஏற்பாடு செய்தால் இந்தத் திட்டத்தை மறுபரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் கீழே இருக்கிற குளத்துக்கு நீர்ப்பாசனம் செய்வதற்குத் தான் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டத்தின் கீழ் சீக்கிரம் வேலை துவங்கும்.

Water supply from Manimuthar System.

*809. *Q.*—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to cut direct channels to each ayacut tank under the Manimuthar System; and

(*b*) if so, what is the stage and when it will be sanctioned and work commenced?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. டி. கணபதி: நாங்குனேரி வட்டத்தில் மணிமுத்தாறு பாசனத்தின் கீழ் பல குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களுக்கு ஒன்று விட்டு ஒன்று தண்ணீர் விட்டால் மூன்று குளங்கள் இருந்தால் முதல் குளத்துக்கு மாத்திரம் தான் தண்ணீர் விடப்படுகிறது. எல்லாக் குளங்களுக்கும் தண்ணீர் கொடுக்க மாவட்ட அளவில் சொல்லி, அங்குள்ள என்ஜினியர்கள் ஒரு தனிக்கால் திட்டத்தை வகுத்து, அதற்கான மதிப்பீட்டையும் அனுப்பி

யிருக்கிருர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியில்லை என்ருல், தனித் தனி கால்வாய் வெட்டி எல்லா குளங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மணிமுத்தாற்றின் கீழ் இருக்கும் பல குளங்கள் ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் இருப்பதால் வாய்க்காலை வெட்ட இயலாது என்ற தகவல் இருக் கிறது. ஆயினும் எக்சிக்யூடிவ் எஞ்சினியர் அவர்கள் இதைப் பற்றித் தொழில் நுட்பத் துறையின் மூலம் ஏதேனும் செய்ய முடியுமா என்று ஆராய்ச்சி செய்து வருகிருர்கள். அதைப் பற்றி அரசுக்குத் தகவல் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு கணபதி நாடார் அவர்கள் கோரிக்கை ரொம்ப நியாயமான கோரிக்கை. மணிமுத் தாறு திட்டத்தின்கீழ் சில குளங்கள் வெகு தொலைவில் இருக்கிறது என்பது உண்மைதான். என்னுடைய தொகுதியிலும் அப்படி சில குளங்கள் இருக்கின்றன. ஆகவே, நல்ல மழை பெய்யக் கூடிய காலத்தில் தண்ணீர் அதிகமாக வரும்போது இப்போதுள்ள குளங்களுக்கும் மணிமுத்தாறு திட்டத்திற்கும் இடையிலே ஒரு பெரிய குளத்தை வெட்டி தண்ணீரைத் தேக்கி மற்றக் குளங் களுக்குத் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது வாய்க்காலை வெட்டுவது பற்றிய கேள்வி. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இப்போது குளம் வெட்ட வேண்டுமென்று சொல்லுகிருர்கள். அது பற்றித் தனியாகக் கேள்விப் போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினு எண்கள் 810, 811, 812 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.